**Directorate of Collegiate Education – From 2007-2008 onwards Free tuition fees for Under graduate students studying in Govt / Govt Aided colleges.**

சுருக்கம்

கல்லூரிக் கல்வித் துறை – 2007–2008 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இளங்கலை (Under Graduate Courses) பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கும் திட்டம் – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர் கல்வி (ஜி1) துறை

**Go.(MS) No.:389**

கார்த்திகை – 18, சர்வஜித்,
திருவள்ளுவர் ஆண்டு 2038,

அரசாணை (நிலை) எண்.389 — நாள். 04–12–2007.

படிக்கப்பட்டவை:-

1. கல்லூரி கல்வி இயக்குநர் கடித எண்.4860/எல்3/2007, நாள். 20–4–2007, 30–4–2007 மற்றும் 22–5–2007.
2. அரசுக் கடித எண் C.D.23(11/2007), பொது (SC) துறை, நாள்.10.11.2007.

Free Tuition Fees

ஆணை:-

2007–2008ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வியினைத் தொடர வழிவகுக்கும் முறையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் ரத்து செய்யப்பட்டு, அரசு கல்லூரிகளில் உயர்கல்வி இலவசமாக வழங்கப்படும் எனவும், மேலும், நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது இச்சலுகை அரசு உதவிபெறும் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் எனவும், சட்டமன்றத்தில் அரசு அறிவித்துள்ளது.

Govt. Aided Colleges

2007-2008 onwards

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழகத்திலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிப்பது தொடர்பான விரிவான கருத்துருவினை மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் கல்லூரி கல்வி இயக்குநர் அரசின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார்.

3. கல்லூரி கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமாக ஆய்வு செய்யப்பட்டு, 2007–2008 ம் கல்வியாண்டு முதல் அரசு / அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிக்கும் திட்டத்தினை அமல்படுத்தலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

Govt. Aided Colleges

Free Tuition Fees

க.கணேசன்,
அரசு செயலாளர்.

Government Secretary

பெறுநர்

கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை –6.
மாநில கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் 15/79.
நகல்: மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை –9.
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதித்துறை, சென்னை – 9.
அலுவலகப் பிரிவுகள், உயர்கல்வி துறை
இருப்பு